# உறுதியான நிலைப்பாட்டை உருவாக்குவோம் : அக்கறையுள்ள கத்தோலிக்கச் சமூகமாக மாறுவோம்

## கடவுளின் படைப்பில் தவக்கால சிந்தனைகள்



MALACCA
JOHORE
DIOCESE

www.mjdiocese.my
mjdiocese
malaccajohorediocese
caritasmjd.mjdiocese.my
creationjustice.mjdiocese.my

MJD 50 2022

www.lenten.mjdiocese.my
MJDLenten

# ஆயரின் செய்தி

“தியனன்மென் தகரி மனிதன்: தலை கவிழ்ந்த சீனப் படை” என்ற இந்த தலையங்கம் 1989, ஜூன் 7 அன்று உலகம் முழுவதும் பளிச்சிட்டது. மாணவர் புரட்சியைச் சீனா இரும்புக் கரம் கொண்டு வெற்றிகரமாக ஒடுக்கிய இருண்ட நாள் 1989, ஜூன் 5. மறுநாளன்று, அதாவது ஜூன் 6 அன்று, சீனாவின் தியனன்மென் சதுக்கத்திற்கு அருகில், தகரிகள் அணிவகுத்து வந்த சாலையில் தனி மனிதன் ஒருவர் தைரியமாகக் குறுக்கிட்டு நின்றார். அவர் யாரென எவருக்கும் தெரியாவிட்டாலும், அவர் எதிர்ப்பின் சின்னமானார். நாம் அவரை “ஒரு நிலைப்பாட்டை எடுத்த மனிதன்” என நினைவில் கொள்கின்றோம்!

நாம் ஒவ்வொருவரும் என்றாவது ஒரு நாள், எதாவது ஓர் இடத்தில் அல்லது எதாவது ஒன்றிற்காக ஒரு நிலைப்பாட்டை எடுக்கத்தான் வேண்டும். அது தனக்காகவோ அல்லது பிறருக்காகவோ அல்லது “குரலற்றோருக்காகவோ” இருக்கலாம். அத்தகைய தருணங்கள் நம்மிடமிருந்து எதிர்பார்ப்பது யாதெனில், எது சரியானதோ அதற்காகக் குரல் கொடுக்கவும் அல்லது அநீதிகளை வெளிப்படுத்தவும் அல்லது நாம் எதை நம்புகின்றோமோ அதற்காக ஒரு நிலைப்பாட்டை எடுப்பதேயாகும்.

ஏன் நாம் ஒரு சிலவற்றுக்காக ஒரு நிலைப்பாட்டை எடுப்பது அவசியம்? ஏனெனில், இந்த செயல் நமது சுயமரியாதையை வளர்க்கவும், பிறரின் மற்றும்

பிறரிடமிருந்து மரியாதையைப் பெறவும், நாம் எந்த விழுமியங்களுக்காக வாழுகின்றோமோ அவற்றைச் சுட்டிக்காட்டவுமே ஆகும். இது நமது நம்பிக்கைக்குச் சான்று பகர்வதாகும்.

"திரு விவிலியத்தில் ஒரு நிலைப்பாட்டை எடுத்த நாயகர்களுக்கு" ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்வது தானியேல் நூலில் குறிப்பிடப்படும் தீயில் தூக்கியெறியப்பட்ட மூன்று இளைஞர்களே ஆவர். அவர்கள் வேற்று தெய்வத்தை வணங்கச் சொன்ன மன்னனுக்கோ அல்லது அம்மன்னனின் கட்டளைக்கோ தலை வணங்கவில்லை. அவர்களை இறை சித்தத்திற்கு எதிராக எந்தவொரு செயலையும் செய்விக்க எவராலும் இயலவில்லை. இவ்வாறு அவர்கள் இஸ்ரயேலரின் ஒரே கடவுளுக்குச்  சான்று பகர்ந்தார்கள். இதைக் கண்ட மன்னனும் அவனது அவையினரும் வியந்தனர்.

இன்று, ஏழைகளுக்கும் பூமிக்கும் என்ன நடக்கிறதோ அந்த செய்திகளை அனைவரும் கேட்டறிய ஒவ்வொரு தனி நபரும், சம்பந்தப்பட்ட குடிமக்களும், கத்தோலிக்கரும் பிறரும், கத்தோலிக்க குழுமங்களும், தேசமும் செயல்பட வேண்டும். நாம் மனம் மாற நாம தீர்ப்பிடப்பட வேண்டும் வாழ்வின் ஒரு புதிய வழியைப பண்படுத்த நாம் மனம் மாற வேண்டும்; *நமது பொது இல்லத்திற்காக அக்கறைப்பட* நம்மை ஒப்புவிக்க நாம் பண்பட வேண்டும்.

கடவுள் எதனை அன்பு செய்கிறாரோ அதனை அன்புசெயும் நீங்கள், ஒரு நிலைப்பாட்டை எடுங்கள்:

*மீள் சுழற்சி மற்றும் கழிவின்மை வழியாய் நிலைத்தன்மைக்காக ஒரு நிலைப்பாட்டை எடுங்கள்*

*பூமியின் தோழர்களோடு இணைந்து பாழடைந்த பூமியையும் கடலையும் குணப்படுத்த ஒரு நிலைப்பாட்டை எடுங்கள்*

*மாசுபடுத்துபவர்கள், சுரண்டுபவர்கள் மற்றும் சட்டத்தை மீறுபவர்கள், அதாவது நமது பொது இல்லமான பூமியைச் சேதப்படுத்துபவர்கள், குறித்துப் புகாரளிக்க ஒரு நிலைப்பாட்டை எடுங்கள்.*

நாம் அவருக்காகவும் அவருடைய சித்தத்திற்காகவும் ஒரு நிலைப்பாட்டை எடுக்கும்போது ஆண்டவர் தன்னையே மகிமைப்படுத்துகிறார். நாம் தனியாக இல்லை.

இணைந்து அவரது அரசைக் கட்டியெழுப்பும்,
ஆயர் பெர்னார்ட் பால்

# மறைமாவட்டத்தில் தவக்காலப் பரப்புரை (பிரச்சாரம்) 2022 - ஓர் அறிமுகம்

# உறுதியான நிலைப்பாட்டை உருவாக்குவோம் : அக்கறையுள்ள கத்தோலிக்கச் சமூகமாக மாறுவோம்.

> யோவான் கைது செய்யப்பட்டபின், கடவுளின் நற்செய்தியைப் பறைசாற்றிக் கொண்டே இயேசு கலிலேயாவிற்கு வந்தார். “காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்து விட்டது; மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்” என்று அவர் கூறினார்.
> *மாற்கு 1:14-15*

தவக்காலம் என்பது மனந்திரும்புதலுக்குரிய காலம் என்று கூறலாம். ‘மனந்திரும்புதல்’ என்றால் பாவத்தில் இருந்து விடுபடுதல்/பாவங்களை விட்டுவிலகுதல் என்று பொருள்படும். கிரேக்க மொழியில் metanoia (μετάνοια) என்று அழைக்கப்படுகின்றது (மாற்கு1:1). ‘ஒருவரின் வாழ்க்கைமுறை, நனவை மாற்றுவது’ என்பதே அச்சொல்லின் பொருள். இருப்பினும், ஏதோ ஒருமாற்றத்திற்காக ஒருவர் மாற முடியாது. இருப்பினும், மாற்கு நற்செய்தியில், நற்செய்தியைத் தழுவுவதன் மூலம் பாவம் இருக்கும் ஒருவரின் வாழ்க்கைமுறையை மாற்றுமாறு அழைப்பு விடுக்கிறது.

நமது கத்தோலிகச் திருச்சபையில், தவக்காலம் என்பது ‘மாற்றத்திற்கு’ உரிய காலம். இந்த ‘மாற்றம்’ மனமாற்றத்தையே குறிக்கின்றது. ‘மனந்திரும்புதல்’ என்றும் இதைச் சொல்லலாம். ஒவ்வொரு வருடமும்

தவக்காலத்தின் போது, நம்மை நாமே ஆராய்ந்து பார்த்துச் செபம், நோன்பு (தவம்), தானம் (தொண்டு செயல்கள்) ஆகிய நற்காரியங்களில் ஈடுபட்டு நம்மை நாமே பரிசோதித்துக் கொள்கின்றோம்.

## மலாக்கா ஜோகூர் மறைமாவட்டத்தின் தவக்காலப் பரப்புரையின் (பிரச்சாரத்தின்) தலைப்பு: "உறுதியான நிலைப்பாட்டை உருவாக்குவோம் : அக்கறையுள்ள கத்தோலிக்கச் சமூகமாக மாறுவோம்"

இந்த ஆண்டு தவக்காலப் பரப்புரையின் (பிரச்சாரத்தின்) கருப்பொருளானது, நமது திருத்தந்தை 2015 ஆண்டு 'லாடாதொ சி' *Laudato Si* ("Praise be to you") புத்தகத்தில் எழுதிய மடலின் தொடர்ச்சியாகும். திருத்தந்தையின் கடிதம், படைப்போடு சமரசத்தை நோக்கிய ஆழமான மாற்றத்திற்கு நம்மை அழைக்கிறது. இது "நமது வாழ்க்கையை ஆராய்வதன் மூலமும், நமது செயல்கள், செயல்படத் தவறியதன் மூலம் கடவுளின் படைப்பிற்கு நாம் தீங்கு விளைவித்த வழிகளையும் ஒப்புக்கொள்வது" (#218) எனலாம்.

தவக்காலத்தின் நமது உள்ளத்தின் எதிரொலியாக, நமது திருத்தந்தை "நாம் ஒரு மனமாற்றம் அல்லது இதய மாற்றத்தை அனுபவிக்க வேண்டும்" (#218) என்று கூறுகிறார். நமது வாழ்க்கைமுறை, மனப்பான்மை, ஆன்மிகம் ஆகியவற்றுடன் இவை அனைத்தும் ஒத்துப் போகின்றனவா என்பதை நாம் ஆராய வேண்டும்.

லாடாதொ சி' ஒரு படைப்பை மையமாகக் கொண்ட ஆன்மிகத்தை வளர்த்துக் கொள்ளும்படி கூறியுள்ளார். அது கடவுளின் படைப்பில் இருப்பதால், கடவுள்

மீதும் ஒருவருக்கு ஒருவர் மீதும் உள்ள அன்பை வெளிப்படுத்துகிறோம் (#84-#88). நமது “பரிவு, இரக்கம், சக மனிதர்களுக்கான அக்கறை” (#91) மூலமும் உண்மையான ஒற்றுமைக்கு நம் இதயங்களைத் திறப்பதன் மூலமும் இதனைச் செய்யலாம். இவை அனைத்தும்  நமது பொது வீடானா இப்புவியை நாம் பராமரிக்கும்போது சாத்தியமாகும்.

தவக்காலப் பரப்புரை (பிரச்சாரம்) 2022, இறைவனின் படைப்புகளைப் பாதுகாக்கவும், அவரின் திட்டத்தை நல்ல முறையில் செயல்படுத்தவும் நம்மை அழைக்கின்றது. உண்மையான அர்ப்பணிப்பு உணர்வுடன் இறைவனின் திட்டம் நிறைவேற முயன்றிடுவோம்.

உறுதியான நிலைப்பாட்டுடன் நம்மையே நாம் முழுமையாக அர்ப்பணிப்போம்.

உறுதியான நிலைப்பாட்டை எப்படி உருவாக்குவது?

ஒரு நிலையான மனப்பான்மையை உருவாக்கி இவ்வுலகினைப் பாதுகாக்க வேண்டும். இதுவே உறுதியான நிலைப்பாடு.

நமது பங்கில் *லாடாதோ சி* உருவாகியிருப்பதன் வழி நமது நிலைப்பாட்டை நாம் உறுதி செய்யலாம். இதன் வழி இப்புவியைப் பாதுகாப்பதையும் பராமரிப்பதையும் நாம் வழக்கமாக்கிக் கொள்ள முடியும். அதே சமயத்தில், பெரியவர்கள், இளைஞர்கள், சிறுவர்களும் இத்தகைய நற்காரியங்களில் ஈடுபட்டுத் தங்களால் முடிந்த வரை இயற்கையைப் பாதுகாக்க முடியும்.

இயற்கை சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நமது முயற்சி வெற்றியடைய, இணையத்தில் இதற்குண்டான புதிய வலைத்தலங்களை உருவாக்க வேண்டும். இதன் மூலம் நாமும் ஒரு நிலைப்பாட்டுடன் செயல்பட முடியும். நமது பங்கின் இந்த அரிய நோக்கம் நிறைவேற, Creation-Justice குழுவுடன் இணைந்து செயல்படலாம். Creation-Justice குழுவும் மறுசுழற்சி இல்லாத இடங்களில், மறுசுழற்சி மையங்களை அமைக்கலாம். மறுசுழற்சி மையங்கள் இயற்கைச் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க பெரும் பங்காற்றுகின்றது. மறுசுழற்சி மையங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்க வேண்டும் என்று மாவட்ட அதிகாரிகளுக்குப் பரிந்துரைக்கலாம்.

இயற்கையைப் பாதுகாக்கும் மறைமாவட்டத்தின் நோக்கத்தினைப் பிற மதக் குழுக்களோடு கலந்துரையாடல் நடத்தலாம். பௌத்த மத்தினர் பல காலமாக இயற்கையைப் பாதுகாத்து வருகின்றனர், என்று நமது திருத்தந்தை *லாடாதோ சி*-யில் வெளியான தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மனித நேயம் மிகவும் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. குறிப்பாக கோவிட்-19 பெருந்தொற்றுப் பாதிப்பில் இருந்து மீண்டு வந்தவர்களுக்கு ஆறுதலாகவும் அவர்களுக்கு உதவுவதன் மூலமும் நமது நிலைப்பாட்டை உறுதி செய்யலாம்.

ஏழைகளையும் அப்பாவி ஜனங்களையும் ஏமாற்றிப் பிழைக்கும் கும்பலைப்போல் நாம் இல்லை என்பதை உறுதி செய்ய வேண்டும். குறிப்பாக வெளிநாட்டில் இருந்து இங்கு வந்து வேலை செய்யும்

தொழிளாளர்கள், புலம்பெயர்ந்தோர், வீட்டுப் பணிப் பெண்கள் போன்றவர்களை அடிமைப்படுத்தாமல், அவர்களை அக்கறையுடன் நடத்த வேண்டும். நம்மிடம் உள்ள அதிகாரத்தை நாம் தவறான வழியில் பயன்படுத்தக் கூடாது.

குழந்தைகள் பாதுகாப்பில் நாம் எப்பொழுதும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். அவர்கள் முறையாக  நடத்தப்படுகின்றனரா?, கொடுமைகளுக்கு ஆளாகியுள்ளனரா போன்றவறை நாம் கவனிக்க வேண்டும். இதன்வழியும் நாம் நமது நிலைப்பாட்டை உறுதிபடுத்த முடியும்.

விலைமதிப்பற்ற இயற்கை வளங்களைச் சேதப்படுத்தாமல் அதனைப் பாதுகாப்பது நமது பொறுப்பு. தேவையில்லா வீண் செலவுகளைச் செய்வதையும் தவிர்க்க வேண்டும்.

தவக்காலப் பிரச்சாரம் 2022

# பங்கு அளவில் நடத்தப்படும் நிகழ்ச்சிகள்

# பங்கின் நிலைப்பாடு என்ன

## செயல் திட்டம்

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக வலை அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு அவர்களுடன் நல்ல உறவை வைத்துக் கொண்டு நமது நிலைப்பாட்டை எடுத்துரைக்க வேண்டும். இத்திட்டம் நல்ல முறையில் நடக்கப் பங்கில் செயல் புரியும் Creation-Justice குழுவுடன் சேர்ந்து நாம் பணிபுரியலாம். அதோடு மலாக்கா ஜோகூர் மறைமாவட்டத்தின் இயற்கையைப் பாதுகாக்கும் நோக்கத்தை அடையும் வகையில் எல்லாப் பங்குகளும் 'Creation-Justice' குழு ஒவ்வொரு பங்கிலும் உருவாவதை உறுதி செய்ய வேண்டும்.

## நடவடிக்கை

பங்கு அளவில் : Creation and Justice குழுவை ஒவ்வொரு பங்கிலும் உருவாக்கி அவர்கள் மறைவாட்டத்தோடு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். (http://creationjustice.mjdiocese.my).

## நடவடிக்கை

எந்தெந்த மாவட்டங்களில் மறுசுழற்சி மையங்கள் இல்லாமல் இருக்கின்றதோ, அங்கு ஒரு மறுசுழற்சி மையம் அமைவதை உறுதி செய்ய வேண்டும். இயற்கைச் சுற்றுச்சூழலைப் பாதிகாப்பதற்கு மறுசுழற்சி மையங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன.

## முதியோர்களுக்கான நடவடிக்கை

உங்கள் குடும்பத்தின் சார்பில் 'Laudato si' அகப்பத்தில் உள்ள' இயற்கையைப் பாதுகாப்போம்' என்ற உறுதிமொழிப் பத்திரத்தில் கையெழுத்திடலாம். https://laudatosiactionplatform.org/pledge-your-commitment/

## சிறுவர்களுக்கான நடவடிக்கை

சிறுவர்களுக்காக ஓவியப் போட்டியை ஏற்பாடு செய்யலாம். 'இப்பூமியை நாம் எவ்வாறு கவனித்துக் கொள்வது போன்ற தலைப்புகளை நாம் அவர்களுக்குக் கொடுக்கலாம்.

## இளைஞர்களுக்கான நடவடிக்கை

இளைஞர்கள் 'Creation-Justice' குழுவினருடன் இணைந்து மறுசுழற்சித் திட்டத்தில் பங்கெடுக்கலாம்.

மலாக்கா ஜோகூர்
மறைமாவட்டத்தின் தவக்காலப்
பரப்புரை (பிரச்சாரம்) 2022

# குடும்பங்களும் அதிசவுக்கான வாராந்திர சிந்தனை வழிகாட்டியும்

# கத்தோலிக்கக் குடும்பமாகவும் அக்கறையுள்ள சமூகமாகவும் வாழ இன்றே ஒரு நிலைப்பாட்டை எடுப்போம்

ஒவ்வொரு ஆண்டும் தவக்காலப் பரப்புரை (பிரச்சாரம்) ஏழைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளது. ஆனால், கடந்த இரண்டு வருடங்களாக இயற்கைச் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. இயற்கையை பாதுகாக்கும் நோக்கில் பல பரப்புரைகளில் (பிரச்சாரங்களில்) ஈடுபாடு காட்டத் தொடங்கியுள்ளது. நமது திருத்தந்தை 'லாடாதோ சி' புத்தகத்தில் சொல்லியிருப்பது போல, படைப்பை மையமாகக் கொண்ட ஆன்மிகக் காரியங்களில் ஈடுபாடு காட்டுவோம்.

> விசுவாச வாழ்வில் வேரூன்றி எடுக்கப்பட்ட நிலைப்பாடுகள் கிறிஸ்தவர்களுக்கும், பிறச் சமய மக்களுக்கும் எப்படி வழிகாட்ட முடியும் என்றும் அவை எப்படி இலக்குகளை அடைய முடியும் என்று கோடிட்டுக் காட்டலாம். இங்கு இரண்டு அம்சங்கள் உள்ளன. ஒன்று, சுற்றுச்சூழல் சீர்கேட்டைச் சீரமைப்பது. இரண்டாவது ,ஏழ்மையில் வாடும் சகோதர சகோதரிகளுக்கு நல்வாழ்வு அமைத்துக் கொடுப்பது. சமயங்களைச் சாராத மக்களும், சுற்றுச்சூழல் நீர்கேட்டைச் சீர்செய்ய முனைந்து வரும் இவ்வேளையில். கிறிஸ்தவர்களாகிய நாம் என்ன உணர வேண்டுமென்றால், சுற்றுச்சூழலும், படைப்பும் இறைவனால் உருவாக்கப்பட்டு அவற்றை மனிதனுடைய பொறுப்பில் பராமரிக்கச் சொல்கிறார்.
>
> *லாடாதோ சி #64*

## தவக்காலத்திற்கான செபம்

*(ஒவ்வொரு வாரமும் வாராந்திர சிந்தனைக்கு முன் இச்செபத்தைச் சொல்லவும்)*

அன்பு தந்தையே, இத்தவக்காலத்தில் எங்கள் வாழ்க்கையைச் சற்று ஆராய்ந்து பார்ப்பதில் நாங்கள் உறுதியாய் இருக்கின்றோம். எங்கள் விசுவாச வாழ்க்கைக்குத் தடையாய் இருக்கின்ற அத்தனை காரியங்களையும் ஆராய்ந்து பார்க்க உமது ஒளியை எம்மேல் காட்டியருளும். உம்முடன் இணைந்து வாழ எங்களுக்கு உதவும்.

ஆண்டவரே, எங்கள் சிந்தனைகளை உறுதிபடுத்தியருளும். இத்தவக்காலத்தில் நாங்கள் செபம், தவம், தொண்டு போன்ற நற்காரியங்களில் ஈடுபட்டுப் பிறருக்கு உதவவும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் எங்களால் இயன்ற பணியைச் செய்யவும் அருள்புரியும். இதன் வழி உமது எல்லா படைப்புகளுடனும் அன்பிலும் ஒற்றுமையிலும் வேரூன்றிய ஒரு வாழ்க்கைமுறையை நாங்கள் வாழ்வோமாக. இத்தவக்காலத்தில் குறிப்பாக எங்களைச் சுற்றியுள்ள குழந்தைகள், ஏழைகள், முதியவர்கள், கைவிடப்பட்டவர்கள், புலம்பெயர்ந்தோர் மீதும் நாங்கள் தொடர்ந்து கவனம் செலுத்த எங்களுக்கு உம் அருளைப் பொழிந்தருளும்.

இறைவா, பாராட்டும் மனப்பான்மையை எம்முள் வளரச் செய்யும். மேலும் இத்தவக்காலத்தில் இயற்கையை நாங்கள் அன்பு செய்யவும் பாதுகாக்கவும் எங்களுக்குத் தேவையான ஆற்றலையும் தந்தருளும். நாங்கள் எங்கள் கடமைகளைச் சரியாக செய்ய உமது கிருபையைத் தந்தருளும்.

இவை அனைத்தையும் உம் திருமகன் இயேசு வழியாகவும், அனைத்துப் படைப்புகளின் அரசியான அன்னை மரியாள் வழியாகவும் உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்

விபூதி புதன், மார்ச் 2, 2022

# சத்தமா அமைதியா

மாறாக, சுயக்கட்டுப்பாட்டோடு ஒரு திருப்திகரமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் சக்தி, தனி மனித விருப்பு வெறுப்புகளோடு சம்பந்தப்பட்டது அல்ல.' ஆன்மிகம் என்ன சொல்கிறது?' எனப் போதிய அளவு புரிந்து கொள்வதும், அதற்கேற்ப,' அமைதி வாழ்வு என்றால் என்ன?' என்பதைக் குறித்தும் சீரான விளக்கங்கள் தரப்பட வேண்டும். போரில்லாத நிலையில் வாழ்வுதான் அமைதி வாழ்வு எனப் பொருள் தருவது சரியல்ல. நிறைவான உன் அமைதி சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும், பொதுநலன் கோட்பாட்டுப் பாதுகாப்பிலும் சம்பந்தப்பட்டுள்ளது. அதை முழுமையாக அடைய சீரான சமநிலை வாழ்வு முறை தேவைப்படுகிறது. இச்சமநிலை வாழ்முறைக்கு உயிரின் ஆழமான அர்த்தங்களைப் புரிந்து கொள்ளவும், இயற்கையின் அழகைப் பார்த்து ஆச்சரியத்தை வெளிப்படுத்தவும் மாபெரும் சக்திகள் உண்டு.

*லாடாதோ சி #225*

*என் வாழ்க்கை முறையில் ஒரு குறிப்பிட்ட ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தக்கூடிய சத்தங்கள் மற்றும் கவனச்சிதறல்கள் என்ன என்பதை யோசித்துப் பார்க்க நேரம் ஒதுக்கியுள்ளேனா?*

*என் அன்புக்குரியவர்களுடனும், என்னைச் சுற்றியுள்ளவர்களுடனும், சுற்றுச்சூழலின் மீதான எனது அக்கறையுடனும் இணக்கமாக இருப்பதில் இந்த ஏற்றத்தாழ்வு பாதிக்கிறதா?*

## நற்செய்தி – மத்தேயு 6:1-6,16-18
## மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்

மக்கள் பார்க்க வேண்டுமென்று அவர்கள்முன் உங்கள் அறச் செயல்களைச் செய்யாதீர்கள். இதைக் குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். இல்லையென்றால் உங்கள் விண்ணகத் தந்தையிடமிருந்து உங்களுக்குக் கைம்மாறு கிடைக்காது. நீங்கள் தர்மம் செய்யும்போது உங்களைப்பற்றித் தம்பட்டம் அடிக்காதீர்கள். வெளிவேடக்காரர், மக்கள் புகழ வேண்டுமென்று தொழுகைக் கூடங்களிலும் சந்துகளிலும் நின்று அவ்வாறு செய்வர். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் தர்மம் செய்யும்போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும். அப்பொழுது நீங்கள் செய்யும் தர்மம் மறைவாயிருக்கும்; மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார். நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது வெளிவேடக்காரரைப்போல் இருக்க வேண்டாம். அவர்கள் தொழுகைக்கூடங்களிலும் வீதியோரங்களிலும் நின்றுகொண்டு மக்கள் பார்க்க வேண்டுமென இறைவேண்டல் செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்று விட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். ஆனால், நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக் கொண்டு, மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார். மேலும் நீங்கள்

நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம். தாங்கள் நோன்பு இருப்பதை மக்கள் பார்க்கவேண்டுமென்றே அவர்கள் தங்கள் முகங்களை விகாரப்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் நோன்பு இருக்கும்போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து, முகத்தைக் கழுவுங்கள். அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாது; மாறாக. மறைவாய் இருக்கிற உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார்.

## சிந்தனைக்கு

பல சமயங்களில் அமைதியான சூழ்நிலைகளில் இருந்துதான் அதிகமான வலிமையும் உத்வேகமும் நம் நினைவுக்கு வரும். இக்காலக்கட்டத்தில் நமது வாழ்க்கை “சத்தத்திற்கு” அடிமையாகிவிட்டது.
சத்தம் என்பது பலரது கவனம், அங்கீகாரம் மற்றும் பாராட்டு ஆகியவற்றின் தேவையைக் குறிக்கும்.
சத்தம் என்பது நமது செயல்களின் வடிவத்தில் இருக்கலாம். நாம் செய்யும் நல்லதை மக்கள் அறிந்து கொள்ளவும் பார்க்கவும் முடியும். பல சமயங்களில் நாம் சந்தோசமாக இருக்கும் தருவாயில் சத்தம் வெளிப்படும். உதாரணமாக, கிசுகிசுக்கள், அதிக வேலையாக இருப்பது மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கும்போது நம்மை மகிழ்விப்பது போன்றவற்றில் சத்தம் வெளிப்படும்.
சத்தம் பல செயல்களைக் குறிக்கும். ஆனால், அவை மனிதனாகவும் இறைவனின் பிள்ளைகளாகவும் நம்மை வளர்க்கவில்லை.

ஒரு “சத்தத்தில்” இருந்து மற்றொரு “சத்தத்திற்கு” நாம் மாறும்போது  நம்மை நாமே கேட்டுக் கொள்ளக்கூடிய கேள்வி: “கடவுள் மட்டும் நமக்குப் போதுமா.
நற்செய்தியில் இயேசு விமர்சித்ததைப்போல் கடவுள் ஏழையா? அல்லது நாம் ஏழையா?

நமது வாழ்க்கையில் இறைவனுக்கு ஓர் இடம் உண்டு என்பதை இயேசு நமக்கு நினைவூட்டுகின்றார். நாம் செய்யும் அனைத்துக் காரியங்களையும் அவர் பார்க்கிறார். நமது செயல் மற்றும் நடவடிக்கைகளை நாம் “சத்தமாக” சொல்லத் தேவையில்லை. கடவுள் அதனை அறிவார். நமது செயல்கள் மற்றும் முடிவுகளை அனைவரும் கேட்கும்படி சொல்ல வேண்டிய அவசியமில்லை, ஏனென்றால், நம்மைப் பொறுத்தவரை, அது கடவுளை நோக்கி செலுத்தப்படும் ஒன்று.

நமது ஆன்மிக வாழ்க்கையில் அமைதியைக் கடைப்பிடிப்போம். அமைதியாய் இருக்கும் போது நமது பரிசுத்த ஆவி நம்முள் கிரியைச் செய்வதை நாம் புரிந்து கொள்ள முடியும். அமைதியாய் இருக்கும் இறைவனோடு ஒன்றாக பயணிக்க நம்மால் முடிகின்றது.

## தவக்கால முயற்சி

இத்தவக்காலத்தில், நோன்பு, ஒப்புரவுச் சடங்கு, சிற்றின்பங்களுக்கு அடிமையாகாமல் இருத்தல் போன்றவை இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள இடைவெளியைக் குறைக்க வகை செய்யும். கடவுளோடு நமக்குள்ள உறவை இன்னும் வலுப்படுத்தும். இந்த வாரம் “சத்தங்கள்” குறித்து நாம் கவனமாய் இருப்பது அவசியம். பரிசுத்த ஆவியின்

தூண்டுதலுக்கு நாம் இடம் கொடாமல் இருந்தால் “சத்தம்” நம் வாழ்க்கையை ஆக்கிரமித்துவிடும் என்பதை என்றும் நினைவில் கொள்ள வேண்டும்.

## என் நிலைபாடு

- தவக்கால செயல்பாடுகள் : தேவைக்கேற்ப உணவை உட்கொள்ள வேண்டும். தவம் செய்வது ஓர் அனுதின நடவடிக்கையாக்காமல், அதன் அர்த்தத்தைத் தெரிந்து செய்ய வேண்டும். எடுத்துக்காட்டாக மாமிசம் உண்பதைத் தவிர்க்கலாம்.

தவக்காலம் குறித்துக் கேனன் சட்டம் 1250-1253இல் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது;

1. அனைத்து லத்தீன் தேவாலயங்களிலும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மற்றும் தவக்காலம் முழுதும் தவம் செய்யலாம்.
2. ஆயர்கள் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின்படி இறைச்சி அல்லது வேறு சில உணவுகளை ஒரு சில புனிதமான விழாவைத் தவிர, அனைத்து வெள்ளிக்கிழமைகளிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக மதுவிலக்கு மற்றும் விரதம் போன்றவை விபூதி புதன் மற்றும் புனித வெள்ளியில் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
3. பதினான்கு வயதை எட்டிய அனைவரும் மதுவிலக்குச் சட்டத்திற்குக் கட்டுப்பட வேண்டும்.
4. 59 வயதுக்கு உட்பட்டவர்கள் விரதம் / நோன்பு எடுக்கலாம். மேலும் மதுபான சட்டத்துக்கு உட்பட்டவர்கள் இதனை அனுசரிக்கலாம். பெற்றோர்கள் தங்கள்

பிள்ளைகள் நோன்பு இருப்பதை உறுதி செய்ய வேண்டியது அவசியம்.

5. நோன்பு எடுக்க முடியாதவர்கள், அதற்குப் பதிலாக பின்வரும் வழிகளில் ஏதாவது ஒரு வழியில் தவம் செய்யலாம். எடுத்துகாட்டாக, திருப்பலிக்குச் செல்வது, செபமாலை செபிப்பது, சிலுவைப்பாதை செய்வது, நற்கருணை ஆராதனையில் கலந்து கொள்வது, ஏழைகளுக்கு உதவுதல், நோயாளிகளைச் சந்தித்தல், இறந்த ஆத்மாக்களுக்காகச் செபிப்பது, பிடித்த உணவு, பானம் அருந்துவதைத் தவிர்த்தல், வெள்ளிக்கிழமைகளில் மாமிசம் சாப்பிடுவதைத் தவிர்த்தல், மனத்துக்குப் பிடித்த நிகழ்ச்சிகளைப் பார்க்காமல் இருப்பது போன்றவை.

(பிப்ரவரி 25, 1984 இல் மலேசியா, சிங்கப்பூர் மற்றும் புருணை ஆயர்களின் மாநாடு)
ஆதாரம்: http://www.heraldmalaysia.com/news/meat-on-friday/26054/13

- ஒரு நிலையான வாழ்க்கை முறைக்கான பழக்கத்தை வளர்ப்பது. உதாரணமாக, பை, தண்ணீர்-புட்டி, உணவுப் பாத்திரங்கள் மற்றும் மின் நாளிதழ், முடிந்தவரை, அதாவது செய்தித்தாள்கள் மற்றும் புத்தகங்கள். முதல் முறை செய்பவர்களுக்கான செயல்: மளிகைப் பொருட்களை வாங்கும்போதோ அல்லது உணவு வாங்கும்போதோ வாரத்திற்கு இருமுறை இப்படிச் செய்ய முயற்சிக்கவும்.

- நோன்புப் பிரச்சாரத்திற்கான (எங்கள் / எனது) பங்களிப்புக்கான இலக்கை அமைக்க வேண்டும்.

உதாரணமாக (எங்கள் / எனது) ஏழைகளுக்கு "தானம்" வழங்குதல். ஒவ்வொரு வாரமும் சேமிக்கும் சம்பளத்தை ஏழைகளுக்காக ஒதுக்குவது போன்றவை.

தவக்காலத்தின் முதல் ஞாயிறு,
மார்ச் 6, 2022

# வாழ்க்கை என்பது ஒரு உருவாக்கம்

விவிலியம் காட்டும் மனித வாழ்வின் விளக்கம் மூன்று அடிப்படையான உறவுகள் வழியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இறைவனோடு கொண்ட உறவு, அயலானோடு கொண்ட உறவு, படைப்போடு கொண்டுள்ள உறவு. விவிலியம் தரும் தகவலின்படி இந்த மூன்று உறவுகளிலும் மனத்தளவில், செயல்பாடுகள் அளவில் மனிதன் விரிசலை ஏற்படுத்தினான். இந்த விரிசலைத்தான் பாவம் என்று சொல்கிறோம். இதன் விளைவாக சமூகமாக நடந்தேறிக் கொண்டிருந்த இறை உறவு, அயலான் உறவு, படைப்போடு உறவு போன்றவைகள் முறிக்கப்பட்டன. படைப்புகளாகிய நம்மிடம் உள்ள குறைகளைக் கண்டுணராமல், கடவுளுடைய இடத்தையே பிடித்து வலைத்துப்போட நினைத்த அகங்காரச் செயல், உறவுகளில் சீர்கேட்டை உருவாக்கியது. இதன் விளைவாக கடவுள் புனித இனத்துக்குக் கட்டளையிட்ட “படைப்பை ஆளக்கடவாய்” (தொநூ 1:28).” “உழுது பராமரி” (தொநூ 2:15) போன்ற அறிவுரைகளை அறநெறி இல்லாத அதிகாரங்களாக மாற்றி சமூகமாக உருவெடுத்த உறவுகள் சிதறடிக்கப்பட்டு, மனிதன் படைப்புக்கு எதிராகச் செயல்பட முனைந்து விட்டான் (தொநூ 3:17-19). இந்நேரத்தில் புனித பிரான்சிஸ்கு அசிசியாரை அறிமுகப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. மனிதனால் துவம்சம் செய்யப்பட்ட உறவுகள் புனித அசிசியாரால் தூசி தட்டப்பட்டு, முறிவுகளுக்கு கட்டுப்போட்டு மீண்டும் அதே உறவுகளை வளர்த்தெடுக்கும் அவருடைய முயற்சி படைப்புகளை அன்பு செய்ய அழைத்துச் செல்கிறது. அசிசியாரின் படைப்பு ஆன்மீகம் பிரபஞ்ச உயிர்களிடம் மன்னிப்பு வேண்டி, மீண்டும் இறைவனோடும், புனித பொனவெந்தூர் தான் எழுதிய “The Major Legend of St.Francis” என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

*லாடாதோ சி #66*

*பாவத்தின் அம்சத்தைக் குறித்து சற்று சிந்திப்போம். பாவம் என்பது நாம் செய்த தவற்றைக் குறிக்கும். பாவம் இறைவனுக்கும் நமக்கும் உள்ள உறவை உடைக்கும் ஒரு கற்பாறை. மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களை நாம் எவ்வாறு நடத்துகிறோம் மற்றும் இயற்கையின் மீது நமது அணுகுமுறை குறித்து கருத்தில் கொள்ளுமாறு போப்பின் கடிதம் நம்மை அழைக்கிறது.*

## நற்செய்தி – லூக்கா 4:1-13
## இயேசு அலகையினால் சோதிக்கப்பட்டது

இயேசு தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு யோர்தான் ஆற்றை விட்டுத் திரும்பினார். பின்னர் அவர் அதே ஆவியால் பாலைநிலத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். அவர் நாற்பது நாள் அலகையினால் சோதிக்கப்பட்டார். அந்நாள்களில் அவர் ஒன்றும் சாப்பிடவில்லை. அதன் பின் அவர் பசியுற்றார். அப்பொழுது அலகை அவரிடம் , "நீர் இறைமகன் என்றால் இந்தக் கல் அப்பமாகும்படி கட்டளையிடும்" என்றது. அதனிடம் இயேசு மறுமொழியாக, "'மனிதர் அப்பத்தினால் மட்டும் வாழ்வதில்லை' என மறைநூலில் எழுதியுள்ளதே" என்றார். பின்பு, அலகை அவரை அழைத்துச் சென்று உலகத்தின் அரசுகள் அனைத்தையும் ஒரு நொடிப்பொழுதில் அவருக்குக் காட்டி, அவரிடம், "இவற்றின்மேல் முழு அதிகாரத்தையும் இவற்றின் மேன்மையையும் உமக்குக் கொடுப்பேன். இவை யாவும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன; நான் விரும்பியவருக்கு இவற்றைக் கொடுப்பேன். நீர் என்னை வணங்கினால் அனைத்தும் உம்முடையவையாகும்" என்றது. இயேசு

அதனிடம் மறுமொழியாக, "'உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக' என்று மறைநூலில் எழுதியுள்ளது" என்றார். பின்னர், அது அவரை எருசலேமுக்கு அழைத்துச் சென்று கோவிலின் உயர்ந்த பகுதியில் அவரை நிறுத்தி, "நீர் இறைமகன் என்றால் இங்கிருந்து கீழே குதியும்;
'உம்மைப் பாதுகாக்கும்படி கடவுள் தம் தூதருக்கு உம்மைக் குறித்துக் கட்டளையிடுவார்' என்றும் 'உமது கால் கல்லில் மோதாதபடி அவர்கள் தங்கள் கைகளால் உம்மைத் தாங்கிக் கொள்வார்கள்' என்றும் மறைநூலில் எழுதியுள்ளது" என்றது. இயேசு அதனிடம் மறுமொழியாக, "'உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதிக்க வேண்டாம்' என்றும் சொல்லியுள்ளதே" என்றார். அலகை சோதனைகள் அனைத்தையும் முடித்தபின்பு ஏற்ற காலம் வரும்வரை அவரைவிட்டு அகன்றது.

## சிந்தனைக்கு

இந்த மூன்று சோதனைகளையும் நாம் மறுபடியும் நினைவுக்குக் கொண்டு வருவது மிகவும் முக்கியம். காரணம் இந்த மூன்று சோதனைகளும் ஆரோக்கியமற்ற சுயநலத்தைக் குறிக்கின்றது. இயேசு சாத்தானுக்கு அடிபணிந்திருந்தால், அவருடைய ஊழியம் பயனற்று போயிருக்கும்.

முதல் சோதனை சுய திருப்தி அல்லது சுய பாதுகாப்பை உணர்த்துகின்றது. "எனக்கு இது தேவை. அது என்னைத் திருப்தியாக்கும்" என்று தன் சுய விருப்பத்தை பூர்த்தி செய்வது. இரண்டாவது சோதனையானது நாம் எதைச் சார்ந்து இருக்கிறோம் என்பதைப் பற்றியது. நாம் கடவுளைத் தவிர மற்ற

எல்லாவற்றையும் சார்ந்துள்ள நபர்களா என்பதைக் குறிக்கின்றது. இதுவும் ஒருவித சுயநலத்தைச் சார்ந்ததுதான். மூன்றாவது சோதனை சுய மதிப்பீடு. சில சமயங்களில் நம்மை நாமே அதிக உயர்வாக நினைக்கலாம். எல்லோரும் நம்மை உயர்வாக எண்ண வேண்டும் என்று எண்ணி பார்க்கலாம். இதுவும் ஒரு வகை சுய நலம்தான்.

இயேசு சந்தித்த நோதனைகளைப் போன்று நம்மில் சிலரும் அனுபவித்திருக்கலாம். மற்றவர்களைப் பற்றி எண்ணாமல், நம்மை பற்றியே அதிகம் கவனம் செலுத்தியிருக்கலாம். நம்மையே நாம் கேளிவிகளைக் கேட்டுக் கொள்வோம்.

- நம்மைப் பற்றி நாம் தற்பெருமையாக எண்ணியுள்ளோமா? நாம் நினைப்பது போன்று நம்மை பிறர் உயர்வாக நடத்தாதபோது நாம் அதைக் குறித்து வருத்தப்பட்டுள்ளோமா?
- பிறர் துன்பத்தில் இருந்தபோது நாம் மட்டும் மகிழ்ச்சியாக இருந்துள்ளோமா? எடுத்துக்காட்டாக என் மனைவி அல்லது வீட்டுப் பணிப்பெண்ணின் கடமை என்னை மகிழ்ச்சிப்படுத்துவே என்று எண்ணி சுயநலத்துடன் இருந்துள்ளேனா?
- என்னிடம் இருக்கும் சொத்துகளும் உடைமைகளும் எனக்கு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் அளித்துள்ளதா?
- எதையும் எதிர்பார்க்காமல் நான் பிறருக்கு உதவி செய்துள்ளேனா? அப்படி செய்கையில் இயேசுவின் அழைப்பை உணர்ந்துள்ளேனா?

## தவக்கால முயற்சி

இவ்வாரத்தில் நம்மை நாம் சற்று ஆராய்வோம். என்னை நான் அதிகம் நேசிக்கின்றேனா? நான் ஒரு

சுயநலவாதியாக இருக்கின்றேனா? நமக்கு நாமே அதிகம் முக்கியத்துவம் கொடுத்தால், நம்மால் ஒரு சிறந்த வாழ்வை வாழவோ உருவாக்கவோ முடியாது. நம்மைப் பற்றியே நாம் அதிகம் சிந்திக்கும் பொழுது அடுத்தவரைப் பற்றி நினைக்க நமக்கு நேரம் இருக்காது.

## என் நிலைபாடு

எனது அயலான் யார்? யாருக்கு நம்முடைய உதவி தேவைப்படுகின்றது என்று முதலில் அடையாளம் காண வேண்டும். முதியோர்கள், ஏழைகள், கைவிடப்பட்டவர்கள், புலம்பெயர்ந்தோர், பணிப்பெண்கள், தொழிலாளர்கள் ஆகியோருக்கு முடிந்த வரையில் நம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்.

நடவடிக்கை:

- நமது அன்புக்குறியவர்களை வாய்மொழியாக, உடல் ரீதியாக அல்லது மனரீதியாகவோ இழிவுபடுத்தியுள்ளோமா? செய்திருக்கிறோமா? உதாரணமாக, நாம் நமது பெற்றோர், பிள்ளைகள் அல்லது மனைவியை அவமானப்படுத்தியுள்ளீர்களா?
- நம்மிடம் வேலை செய்பவர்களை நம்மால் நன்முறையில் நடத்தமுடியாவிட்டால், அவர்களை நாம் வேலைக்கு வைத்திராமல் இருப்பதே நலம். அவர்களைக் கண்ணியமாக நன்முறையில் நடத்துகின்ற முதலாளிகளிடம் வேலை வாங்கி கொடுப்பதே நல்லது.
- உங்களிடம் வேலை செய்யும் அந்நிய நாட்டவர்களுக்கு ஊதியம் மட்டும் கொடுப்பதோடு இல்லாமல், அவர்களுக்கு உணவோ அல்லது விடுமுறையோ கொடுத்து அவர்களை

மகிழ்ச்சிப்படுத்தலாம். மற்றவர்கள் உங்களை எப்படி நடத்த வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ, அதேபோல் நீங்களும் மற்றவர்களை நடத்துங்கள். எப்பொழுதும் நியாயமாக நடந்து கொள்ளுங்கள், கனிவாகப் பேசுங்கள் அவர்களிடம் பணிவாக நடந்து கொள்ளுங்கள்.

தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு,
மார்ச் 13, 2022

# எஞ்சியவை யாது?

கடவுளைச் சந்திக்க வேண்டுமென்றால், இவ்வுலகை வெறுத்து விட்டு வனத்துக்கு ஓட வேண்டிய அவசியம் இல்லை. இயற்கைக்குப் புறமுதுகு காட்ட வேண்டிய அவசியம் இல்லை. “அழகு என்னும் சொல்லுக்குக் கீழைத் திருச்சபைகள் சிறப்பு அம்சங்களைச் சேர்த்திருக்கின்றன. அழகைப் பற்றி உணர்ந்து கொள்ள வேண்டுமென்றால் கடவுள் இப்புவியோடு கொண்டுள்ள சுமூகமான உறவின் மூலமும், இவ்வுறவின் மூலம் மனிதன் மீண்டும் இறைச்சாயலாக உருமாறி இருப்பதையும், எங்கெங்குத் தேடினாலும் இந்த அழகை நம் கண்களால் பார்க்க முடிகிறது. அதோடு திருச்சபையின் பரிணாம வளர்ச்சியிலும், பாடல்களிலும். ஒலிகளிலும், வண்ணங்களிலும், ஒளி விளக்குகளிலும், வாசனைப் பொருட்களிலும் அழகைக் காண முடிகிறது.
*லாடாதோ சி #235*

## நற்செய்தி – லூக்கா 9:28-36
## இயேசுவின் உருமாற்றம்

இவற்றையெல்லாம் சொல்லி ஏறக்குறைய எட்டு நாள்கள் ஆனபிறகு இயேசு பேதுருவையும் யோவானையும் யாக்கோபையும் கூட்டிக்கொண்டு இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலைமீது ஏறினார். அவர் வேண்டிக்கொண்டிருந்தபோது அவரது முகத்தோற்றம் மாறியது; அவருடைய ஆடையும் வெண்மையாய் மின்னியது. மோசே, எலியா என்னும் இருவர் அவரோடு பேசிக் கொண்டிருந்தனர். மாட்சியுடன் தோன்றிய அவர்கள் எருசலேமில் நிறைவேறவிருந்த அவருடைய இறப்பைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். பேதுருவும் அவரோடு இருந்தவர்களும் தூக்கக் கலக்கமாய் இருந்தார்கள். அவர்கள் விழித்தபோது

மாட்சியோடு இலங்கிய அவரையும் அவரோடு நின்ற இருவரையும் கண்டார்கள். அவ்விருவரும் அவரை விட்டுப் பிரிந்து சென்றபோது, பேதுரு இயேசுவை நோக்கி, “ஆண்டவரே, நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைப்போம்” என்று தாம் சொல்வது இன்னதென்று தெரியாமலே சொன்னார். இவற்றை அவர் சொல்லிக்கொண்டிருக்கும்போது ஒரு மேகம் வந்து அவர்கள்மேல் நிழலிட்டது. அம்மேகம் அவர்களைக் சூழ்ந்தபோது அவர்கள் அஞ்சினார்கள். அந்த மேகத்தினின்று, “இவரே என் மைந்தர்; நான் தேர்ந்து கொண்டவர் இவரே. இவருக்குச் செவிசாயுங்கள்” என்று ஒரு குரல் ஒலித்தது. அந்தக் குரல் கேட்டபொழுது இயேசு மட்டும் இருந்தார். தாங்கள் கண்டவற்றில் எதையும் அவர்கள் அந்நாள்களில் யாருக்கும் சொல்லாமல் அமைதி காத்தார்கள்.

## சிந்தனைக்கு

Moகிறிஸ்து வருவதற்கு முன்பே மோயீசன் வாயிலாக இறைவன் கொடுத்த சட்டத்தை இஸ்ராயேல் மக்கள் ஏற்று கொண்டனர். அனைத்து தீர்க்கதரிகளையும் பிரதிநிதித்த எலியாவும், இஸ்ரயேல் மக்களுக்குத் திருச்சட்டத்தின் கட்டளைகளை நினைவுபடுத்தினார். கடவுளின் ஒரே மகனான இயேசு இவர்கள் இருவரையும் மிஞ்சியுள்ளார். இயேசுவின் உருமாற்றம் இவ்வுலகத்தில் நம்மோடு ஒருவராக இருப்பதைக் குறிக்கின்றது. இயேசு நம்முள் எப்படி கிரியை செய்கின்றார் என்பது இதன்வழி தெரிகின்றது. இயேசுவின் உருமாற்றம் நம் அனைவருக்கும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

பேதுருவும் யோவானும் இயேசுவுடன் மலையில் தங்க விரும்பினர். ஆனால், அவர்களால் முடியவில்லை. இறுதியில், அவர்களுக்கு எல்லாம் மங்கலாக தெரிந்தது. அவர்களும் சோர்வுற்றுக் காணப்பட்டனர். இராயப்பரின் மரணம் ஒரு தியாகியின் மரணம் போல் இருந்தது. யோவானின் வாழ்க்கையோ மிகவும் எளிமையானதாகவும் இயற்கையாகவும் இருந்தது. அதுபோலவே, விசுவாசத்துடன் இருந்தால் மட்டுமே நம்மால் வாழ முடியும். நம்முடைய விசுவாச வாழ்வு எவ்வாறு அமைய வேண்டும் என்று இறைவன் திட்டமிடுகின்றாரோ, அதுவரை நமது வாழ்க்கைப் பயணம் ஒரு யாத்திரையாகத்தான் அமையும். ஒரு பழமொழி சொல்வது போல், “நாம் யாராக இருக்க வேண்டும் என்பது கடவுள் நமக்கு அளித்த பரிசு; நாம் யாராக மாறுகிறோம் என்பது கடவுளுக்கு நாம் கொடுக்கும் பரிசு”. எசாயா 40:8இல் கூறியிருப்பது போல ““உரக்கக் கூறு” என்றது ஒரு குரல்; “எதை நான் உரக்கக் கூற வேண்டும்?” என்றேன். “மானிடர் அனைவரும் புல்லே ஆவர்; அவர்களின் மேன்மை வயல்வெளிப் பூவே!”. இறுதியில் அனைத்தும் படிப்படியாக மங்கும் போது இயேசு மட்டுமே நமக்காக இருப்பார் என்பதை இயேசுவின் இந்த உருமாற்றம் அறிவுறுத்துகின்றது. நம்முடைய வாழ்க்கையில் அனைத்தும் ஒரு முடிவுக்கு வரும்போது, நம்மிடம் எஞ்சியிருக்கப்போவது என்ன? இயேசுவிடம் நாம் எதைக் கொடுக்கப் போகின்றோம்?

## தவக்கால முயற்சி

*லாடாதோ சி,* இறைவனின் படைப்பில் இருக்கும் நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் பற்றிப் பேசியுள்ளார். நமது திருத்தந்தையும் “சுற்றுச்சூழலுக்கு உதவும் வகையில் உள்ள நமது கடமைகள், விசுவாச

வாழ்வில் வேரூன்றிச் செய்யப்படுகின்றபோது அவற்றிற்குப் புதுப்பொழிவும், தெம்பும் பிறக்கின்றன. விசுவாசத்தை மையமாக வைத்துச் செய்யப்படுகின்ற செயல்பாடுகள் மாபெரும் வெற்றிகளைக் கண்டுள்ளன" என்று எழுதியுள்ளார். (லா.சி#64) சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக நமது பங்கைச் செய்ய நாம் தயாராய் இருக்கிறோமா? என நம்மை நாமே கேட்டுப் பார்ப்போம்.

## என் நிலைபாடு

- வீண் விரயத்திற்கு எதிராக நாம் எப்பொழுதும் விழிப்புடன் இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக தண்ணீர் மற்றும் மின்சாரத்தை அதிக அளவில் பயன்படுத்துவதைக் குறைத்து கொள்ள வேண்டும். அரிசி மற்றும் காய்கறிகளை கழுவும் தண்ணீரை நமது செடிகளுக்கு ஊற்றலாம். நாம் வீட்டைவிட்டு அல்லது அறையைவிட்டு வெளியேறும் போது மின்விசிறிகளையும் குளிரூட்டியையும் அணைத்துவிட வேண்டும். முடிந்தவரை கூட்டுசவாரியை மேற்கொள்ள வேண்டும்.
- வீட்டில் மின்விசிறியைப் பொறுத்துவது நல்லது. ஒரு சில நேரங்களில் நமது வீட்டின் அமைப்புக்கு அது பொருந்தாமல் இருந்தாலும், எவ்விதமான இயற்கை பாதிப்பும் இல்லாதவாறு நாம் இருக்கும் அறையை அது குளுமைப்படுத்தும்.

*புதியவர்களுக்காக:*

- முதலில் கூட்டுச்சவாரி செய்ய முற்படுங்கள். காய்கறி அல்லது அரிசி கழுவிய நீரைப் தாவரங்களுக்குப் பாய்ச்சுங்கள். அறையைவிட்டு வெளியேறும் பொழுது, மின்விசிறியின் விசையை அணைக்கவும். ஓர் அறையில் இருந்து வெளியேறும்

போது, குளிரூட்டியை அணைக்கவும்.

- மறுசுழற்சி செய்ய முற்படுங்கள். நெகிழி மற்றும் அலுமினியம் பொருட்களை மறுபயனீடு செய்ய சிறந்த இடத்தைத் தேடுங்கள். ஒரு சில பேரங்காடிகளில் பெரிய கொள்கலன்கள் உள்ளன, அங்கு நீங்கள் பயன்படுத்திய மின்கலன்களைப் (பேட்டரிகள்) பாதுகாப்பாக அப்புறப்படுத்தலாம்.

தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு,
மார்ச் 20, 2022

# மனந்திரும்புவதால் ஏற்படும் நன்மைகள்

“கிறிஸ்தவ சமயம் லௌகீகப் பொருட்களை நிராகரிக்கவில்லை. மாறாக மனித உடல் ஒரு வழிபாட்டு அம்சமாக மாறிவிடுகிறது. மனித உடல் பரிசுத்த ஆவியின் ஆலயமாக மாறிவிடுகிறது. இயேசுகிறிஸ்துவின் உடலோடு, மனித உடல்கள் ஐக்கியமாகிவிடுகின்றன’ எனத் திருத்தந்தையர் மேற்கோள் காட்டி இக்காப்பியத்தில் எழுதியுள்ளார்.
*லாடாதோ சி #235*

## நற்செய்தி – லூக்கா 13:1-9
## ‘இன்னும் ஓராண்டு இந்த அத்தி மரத்தை விட்டு வையும்’

அவ்வேளையில் சிலர் இயேசுவிடம் வந்து, பலி செலுத்திக் கொண்டிருந்த கலிலேயரைப் பிலாத்து கொன்றான் என்ற செய்தியை அறிவித்தனர். அவர் அவர்களிடம் மறுமொழியாக, “இக்கலிலேயருக்கு இவ்வாறு நிகழ்ந்ததால் இவர்கள் மற்றெல்லாக் கலிலேயரையும்விடப் பாவிகள் என நினைக்கிறீர்களா? அப்படி அல்ல என உங்களுக்குச் சொல்கிறேன். மனம் மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அவ்வாறே அழிவீர்கள். சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்றதே. அவர்கள் எருசலேமில் குடியிருந்த மற்ற எல்லாரையும்விடக் குற்றவாளிகள் என நினைக்கிறீர்களா? அப்படி அல்ல என உங்களுக்குச் சொல்கிறேன். மனம் மாறாவிட்டால் நீங்கள் அனைவரும் அப்படியே அழிவீர்கள்” என்றார்.

மேலும், இயேசு இந்த உவமையைக் கூறினார்: “ஒருவர் தம் திராட்சைத் தோட்டத்தில் அத்திமரம் ஒன்றை நட்டு வைத்திருந்தார். அவர் வந்து அதில் கனியைத் தேடியபோது எதையும் காணவில்லை. எனவே,

அவர் தோட்டத் தொழிலாளரிடம், ‘பாரும், மூன்று ஆண்டுகளாக இந்த அத்தி மரத்தில் கனியைத் தேடி வருகிறேன்; எதையும் காணவில்லை. ஆகவே, இதை வெட்டிவிடும். இடத்தை ஏன் அடைத்துக்கொண்டிருக்க வேண்டும்?’ என்றார். தொழிலாளர் மறுமொழியாக, ‘ஐயா, இந்த ஆண்டும் இதை விட்டுவையும்; நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருபோடுவேன். அடுத்த ஆண்டு கனி கொடுத்தால் சரி; இல்லையானால் இதை வெட்டிவிடலாம்’ என்று அவரிடம் கூறினார்.”

## சிந்தனைக்கு

இன்றைய நற்செய்தி மனந்திரும்புதலைப் பற்றி நமக்கு விளக்குகின்றது. ஆயினும் இயேசு இதனை நேரடியாக கூறாமல் உவமைகள் வாயிலாக நம்மிடம் பேசுகின்றார். நம் வாழ்வில் நம்முடைய தேர்வுகள் நமக்குப் பலன் கொடுப்பவையாக இருக்க வேண்டும். நம்முடைய தவறான தேர்வுகள் நம்முடைய விசுவாச வாழ்க்கைக்கு தடையாக அமையக்கூடும். கலாத்தியர் 5ஆம் அதிகாரத்தில் புனித பவுல் ‘தூய ஆவியின் துணையால் நாம் வாழ்கிறோம். எனவே, அந்த ஆவி காட்டும் நெறியிலேயே நடக்க முயலுவோம். வீண் பெருமையைத் தேடாமலும், ஒருவருக்கு ஒருவர் எரிச்சல் ஊட்டாமலும், ஒருவர்மீது ஒருவர் பொறாமைப்படாமலும் இருப்போமாக!’ என்று கூறியுள்ளார்.(கலாத்தியர் 5:25-26)

ஊனியல்பின் செயல்கள் யாவருக்கும் தெளிவாய்த் தெரியும். அவை பரத்தைமை, கெட்ட நடத்தை, காமவெறி, 20 சிலைவழிபாடு, பில்லி சூனியம், பகைமை, சண்டை, சச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு, அழுக்காறு, குடிவெறி, களியாட்டம் முதலியவை ஆகும்.

இத்தகையவற்றில் ஈடுபடுவோர் இறையாட்சியை உரிமைப் பேறாக அடைவதில்லை என்று நான் ஏற்கெனவே சொன்னேன். அதையே இப்போதும் மீண்டும் சொல்கிறேன். (கலாத்தியர் 5:19-21)

மனமாற்றம் அடைய இன்னும் நேரம் இருக்கின்றது. நாம் பிறருக்கு பலன் தரும் மரங்களாக இருக்க வேண்டும். அம்மரத்தில் இருக்கும் பழங்கள் பிறருக்கு நன்மை பயக்கும் வகையில் இருந்தால் நல்லது. அது போலவே, நாமும் நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்குப் பலன் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும். பரிசுத்த ஆவியின் துணையுடன் நாம் நடக்கும் போது 'வீண் பெருமையைத் தேடாமலும், ஒருவருக்கு ஒருவர் எரிச்சல் ஊட்டாமலும், ஒருவர்மீது ஒருவர் பொறாமைப்படாமலும் இருப்போமாக!' என்று புனித பவுல் கூறுகின்றார்.

இத்தவக்காலத்தில், நாம் பிறருக்கு எப்படிப் பலன் கொடுப்பவர்களாக இருக்க முடியும் என்று சற்றுச் சிந்திப்போம். தவறான காரியங்களில் நாம் ஈடுபடாமல் இருப்போமாக. "உன்மீது நீ அன்புகூர்வது போல உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூர்வாயாக" என்னும் இந்த ஒரே கட்டளையில் திருச்சட்டம் முழுவதும் நிறைவு பெறுகிறது. (கலாத்தியர் 5:14)

## தவக்கால முயற்சி

நாம் எப்படி நமது அன்பை பிறருக்குக் காட்ட முடியும்? நமது அண்டை அயலாருக்கு நாம் நமது அன்பைக் காட்ட முடியும். நாம் இறைவனுக்குள் வாழும் பொழுது, எப்படிப் பட்ட சூழ்நிலையிலும் நாம் பிறருக்கு நமது அன்பை வெளிப்படுத்த முடியும். நாம் வாழும் வாழ்க்கை பிறருக்கு பயனுள்ளதாய் இருக்க

வேண்டும். பிறருக்குச் செய்யும் நற்காரியங்களில் நமது பங்களிப்பு பெரிதாய் இருக்க வேண்டும். நமது திருத்தந்தை கூறியிருப்பதுபோல, ஒரு சில அமைப்புகள், எல்லோருக்கும் பொதுவாக உள்ள இடங்களைப் பாதுகாத்தும், பராமரித்தும் வருகின்றன. உதாரணமாக, வரலாற்றுச் சிறப்புமிக்கக் கட்டிடங்கள், நீறுற்று, புராதனச் சின்னங்கள், சாலைகளில் உள்ள வரலாற்றுக் கட்டிடங்கள், அழகு வாய்ந்த நிலப்பரப்புகள் போன்றவற்றைப் பொதுமக்கள் மரபுசொத்து எனக் கருதி, பாதுகாத்தும் புதுப்பித்தும் அவற்றிற்கு அழகு சேர்த்தும் வருகின்றனர். (*லாடாதோ சி* #232).

## என் நிலைபாடு

- உங்கள் பகுதியில் உள்ள பொது இடங்கள் மீது அக்கறை காட்டும் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். எடுத்துக்காட்டாக் தற்பொழுது குப்பைக்கொடுட்டும் இடம், இயற்கை நிலக்காட்சி இடமாக இருந்திருக்க முடியுமா?
- தேவாலயம் அனைவருக்கும் பொதுவான இடமாக அமையுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். தேவாலயத்தின் பயன்படுத்தப்படாத பகுதியைச் சுத்தம் செய்வதற்கும் மேம்படுத்துவதற்கும் அழகுபடுத்துவதற்கும் உங்கள் அதிச ஒரு செயல்பாட்டைத் திட்டமிட விரும்புகிறது என்பதை உங்கள் பங்கு குருவானவரிடம் தெரிவிக்கவும்.
- சுற்றுச்சூழலுக்கான நமது அணுகுமுறைகள் மற்றும் முயற்சிகள் குறித்து நமது குடும்பங்கள், வீட்டுத் தோழர்கள் மற்றும் அதிசவில் மதிப்பீடு செய்து கலந்துரையாடுவோம். இதை நாம் மூன்று நிலைகளில் செய்யலாம்.
    - சுற்றுச்சூழலைப் பராமரிப்பதில் (நமது/எனது) “சுற்றுச்சூழல் நற்பண்புகள்” அல்லது (நமது/

எனது) நோக்குநிலையை (நாம்/நான்) எவ்வாறு வளர்த்துள்ளோம்?

- எதை (நாம்/நான்) நன்றாக செய்தோம்?
- அப்பகுதிகளில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளதா?
- மேலே உள்ள கூற்று எதுவும் இல்லை என்றால், இப்பணியை நான் எப்படி தொடங்குவது?

தவக்காலத்தின் நான்காம் ஞாயிறு,
மார்ச் 27, 2022 (மகிழ்ச்சியின் ஞாயிறு)

# படைப்பை மையமாகக் கொண்ட ஆன்மீகத்திற்கு இடையே இருக்கும் மனந்திரும்புதலும் முறையான கோபமும்

*'Laetare Sunday' என்பது ஒரு லத்தீன் சொல். திது 'மகிழ்ச்சியின் ஞாயிறு என்பதை குறிக்கின்றது. தவக்காலத்தின் மத்தியிலும், உயிர்த்தெழுந்த ஆண்டவராகிய இயேசுவில் வேரூன்றியிருக்கும் நம்முடைய விசுவாசம் மற்றும் நம்பிக்கையின் காரணமாக மகிழ்ச்சியும் நம்பிக்கையும் இருக்க முடியும் என்பதைத் திருச்சபை நமக்கு நினைவூட்டுகிறது என்பதே அதன் பொருள்.*

புனித இரண்டாம் ஜான்பால் 1980 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் தேதி ஜெர்மன் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார் : "ஒவ்வொரு மானிட உயிரினத்தின் மேலும் படைப்பாளியாகிய இறைவன் தமது மாண்பையும், அழகையும் சுமத்தி, அளவுகடந்த மரியாதையைக் கூட்டிச் சேர்த்திருக்கிறார். மனித இனத்தின் மரியாதையையும், மாண்பையும் காப்பாற்ற முனையும் மக்களுக்கு, கிறிஸ்தவப் போதனைகள் பெரும் உதவியாக உள்ளன." ஏதோ, அதிர்ஷ்டவசத்தால், இயற்கைத் தேர்வு மூலம் மனித இனம் உருவாக்கப்பட்டிருக்கிறது எனும் விஞ்ஞானக் கூற்றை தவிடு பொடியாக்கும் வகையில் கிறிஸ்தவப் போதனைகள் அமைந்துள்ளன. படைப்பாளியாகிய கடவுள், மனித இனத்தைப் பார்த்து இவ்வாறு சொல்கிறார்: "தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கும் முன்பே அறிந்திருந்தேன்" (எரே 1:5)
*லாடாதோ சி #65*

## நற்செய்தி – லூக்கா 15:1-3,11-32
## ஊதாரி மகன்

வரிதண்டுவோர், பாவிகள் யாவரும் இயேசு சொல்வதைக் கேட்க அவரிடம் நெருங்கிவந்தனர். பரிசேயரும், மறைநூல் அறிஞரும், “இவர் பாவிகளை வரவேற்று அவர்களோடு உணவருந்துகிறாரே” என்று முணுமுணுத்தனர். அப்போது அவர் அவர்களுக்கு இந்த உவமையைச் சொன்னார்:
மேலும் இயேசு கூறியது: “ஒருவருக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். அவர்களுள் இளையவர் தந்தையை நோக்கி, ‘அப்பா, சொத்தில் எனக்கு உரிய பங்கைத் தாரும்” என்றார். அவர் சொத்தை அவர்களுக்குப் பகிர்ந்து அளித்தார். சில நாள்களுக்குள் இளைய மகன் எல்லாவற்றையும் திரட்டிக்கொண்டு, தொலை நாட்டிற்கு நெடும் பயணம் மேற்கொண்டார்; அங்குத் தாறுமாறாக வாழ்ந்து தம் சொத்தையும் பாழாக்கினார். அனைத்தையும் அவர் செலவழித்தார். பின்பு அந்த நாடு முழுவதும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது அவர் வறுமையில் வாடினார்; எனவே, அந்நாட்டுக் குடிமக்களுள் ஒருவரிடம் அண்டிப் பிழைக்கச் சென்றார். அவர் அவரைப் பன்றி மேய்க்கத் தம் வயல்களுக்கு அனுப்பினார். அவர் பன்றிகள் தின்னும் நெற்றுகளால் தம் வயிற்றை நிரப்ப விரும்பினார். ஆனால், அதைக்கூட அவருக்குக் கொடுப்பார் இல்லை. அவர் அறிவு தெளிந்தவராய், ‘என் தந்தையின் கூலியாள்களுக்குத் தேவைக்கு மிகுதியான உணவு இருக்க, நான் இங்குப் பசியால் சாகிறேனே! நான் புறப்பட்டு என் தந்தையிடம் போய், ‘அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்; இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன்; உம்முடைய கூலியாள்களுள்

ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும் என்பேன்'
என்று சொல்லிக்கொண்டார்.

உடனே அவர் புறப்பட்டுத் தம் தந்தையிடம் வந்தார். தொலையில் வந்துகொண்டிருந்தபோதே அவர் தந்தை அவரைக் கண்டு, பரிவு கொண்டு, ஓடிப்போய் அவரைக் கட்டித் தழுவி முத்தமிட்டார். மகனோ அவரிடம், 'அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்; இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன்' என்றார். தந்தை தம் பணியாளரை நோக்கி, 'முதல்தரமான ஆடையைக் கொண்டுவந்து இவனுக்கு உடுத்துங்கள்; இவனுடைய கைக்கு மோதிரமும், காலுக்கு மிதியடியும் அணிவியுங்கள்; கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள்; நாம் மகிழ்ந்து விருந்து கொண்டாடுவோம். ஏனெனில், என் மகன் இவன் இறந்துபோயிருந்தான்; மீண்டும் உயிர் பெற்று வந்துள்ளான். காணாமற்போயிருந்தான்; மீண்டும் கிடைத்துள்ளான்' என்றார். அவர்கள் மகிழ்ந்து விருந்து கொண்டாடத் தொடங்கினார்கள்.

"அப்போது மூத்த மகன் வயலில் இருந்தார். அவர் திரும்பி வீட்டை நெருங்கி வந்துகொண்டிருந்தபோது, ஆடல் பாடல்களைக் கேட்டு, ஊழியர்களுள் ஒருவரை வரவழைத்து, 'இதெல்லாம் என்ன?' என்று வினவினார். அதற்கு ஊழியர் அவரிடம், 'உம் தம்பி வந்திருக்கிறார். அவர் தம்மிடம் நலமாகத் திரும்பி வந்திருப்பதால் உம் தந்தை கொழுத்த கன்றை அடித்திருக்கிறார்' என்றார். அவர் சினமுற்று உள்ளே போக விருப்பம் இல்லாதிருந்தார். உடனே அவருடைய தந்தை வெளியே வந்து, அவரை உள்ளே வருமாறு கெஞ்சிக் கேட்டார். அதற்கு அவர் தந்தையிடம், 'பாரும், இத்தனை ஆண்டுகளாக நான் அடிமைபோன்று உமக்கு வேலை

செய்துவருகிறேன். உம் கட்டளைகளை ஒருபோதும் மீறியதில்லை. ஆயினும், என் நண்பரோடு நான் மகிழ்ந்துகொண்டாட ஓர் ஆட்டுக்குட்டியைக்கூட என்றுமே நீர் தந்ததில்லை. ஆனால், விலைமகளிரோடு சேர்ந்து உம் சொத்துகளையெல்லாம் அழித்துவிட்ட இந்த உம் மகன் திரும்பி வந்தவுடனே, இவனுக்காகக் கொழுத்த கன்றை அடித்திருக்கிறீரே!' என்றார். அதற்குத் தந்தை, 'மகனே, நீ எப்போதும் என்னுடன் இருக்கிறாய்; என்னுடையதெல்லாம் உன்னுடையதே. இப்போது நாம் மகிழ்ந்துகொண்டாடி இன்புற வேண்டும். ஏனெனில், உன் தம்பி இவன் இறந்து போயிருந்தான்; மீண்டும் உயிர்பெற்றுள்ளான். காணாமற்போயிருந்தான்; மீண்டும் கிடைத்துள்ளான்' என்றார்."

## சிந்தனைக்கு

இன்றைய நற்செய்தியில் மூன்று கதைகளும் மூன்று முக்கியக் கதாப்பாத்திரங்கள் உள்ளனர். அப்பா, மூத்த மகன் மற்றும் இளைய மகன். இளைய மகன் தன் தவற்றை உணர்ந்து மனந்திரும்பினான் என்று நற்செய்தி கூறுகிறது. தன் மகனாகக் கருதப்படுவதற்குத் தனக்குத் தகுதியில்லை என்று தன் தந்தையிடம் சொல்லவும் முடிவு செய்தார், இளைய மகன். அவரது மனந்திரும்புதலில், அவர் தனது தந்தையை மீண்டும் தன்னை அரவணைப்பதற்காக தனது முந்தைய நிலையை (சுயநலம்,பெருமை) போன்றவற்றைக் கைவிட்டார். இரண்டாவது கதை மூத்த மகனைப் பற்றியது. பல வேத அறிஞர்கள் இயேசுவின் உவமையைச் சுட்டிக் காட்டும்போது இரண்டாவது மகன் மீது அதிக கவனம் செலுத்தினர். இளைய மகன் ஊதாரிக் குமாரன் அல்ல என்றும் கூறினர். மூத்த மகனுக்கு தன் இளைய சகோதரன் திரும்பி வந்துவிட்டதால் வருத்தமும் கோபமும் ஏற்பட்டது.

அவர் தனது சகோதரனுக்கு வெளியில் ஏற்பட்ட பிரச்சனைகளைக் கருத்தில் கொள்ளவில்லை. தன் சகோதரனை அவர் 'ஆழமாக' புரிந்துகொள்ளவில்லை. சகோதரர் இருவரிடமும் புரிந்துணர்வு இல்லாமல் போயிற்று. அண்ணன் தனக்குக் கிடைக்காத ஒன்று தன் தம்பிக்குக் கிடைத்துவிட்டதே என்ற ஆதங்கம் மட்டும் மேலோங்கி இருந்தது. மூத்த மகன் மிகவும் நல்லவர். தன் தந்தையுடன் கூடவே இருந்தார். தன் தம்பியைப் போல் இல்லாமல் அனைத்து வேலைகளையும் அவரே செய்தார். இருப்பினும், தன் நண்பர்களுடன் ஒன்றாக விருந்துண்ண அவருக்கு ஓர் ஆடுகூட கிடைக்கவில்லை. அண்ணனின் பார்வையில் தம்பி 'பயனற்றவர்'. அவரைப் பொறுத்தவரை தம்பி என்ற ஒருவர் 'இறந்து விட்டார்'.

இந்தக் கதையில், தந்தைக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், அவரே எல்லாவற்றையும் 'படைத்தவர்'. தந்தையைப் பொருத்தமட்டில், அனைவரும் சமமே. அனைவரும் வளர்வதற்குத் தகுதியானவர்களே. இரண்டாவது மூன்றாவது வாய்ப்புகள் குறித்து இங்குப் பேசப்படவில்லை. அனைவருக்கும் எப்பொழுதும் வாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு தந்தையின் நிலைபாடு என்றும் தயாராய் இருக்கும். இளைய மகன் வருவதைக் கண்ட தகப்பனே அவரை நோக்கி ஓடினார். மகனை முதலில் முத்தமிட்டு அணைத்தவர் தந்தை. தன் மகனுக்கு அங்கியும், விரலில் மோதிரமும், காலில் செருப்பும் போட்டவரும் தந்தை. ஒரு பெரிய விருந்துக்கு ஏற்பாடு செய்து, அனைவரையும் அழைத்தவரும் அப்பாதான். அதோடு அல்லாமல், கோபமாய் வெளியிலேயே அமர்ந்திருந்த மூத்த மகனிடம் முதலில் பேசியவரும் அப்பாதான்.

கோபமாய் இருந்த மூத்த மகனை மகிழ்ச்சிப்படுத்த முற்பட்டவரும் தந்தைதான். ஒரு தந்தையின் அணுகுமுறை ஆன்மிகத்தை ஒட்டியே அமைந்துள்ளது.

## தவக்கால முயற்சி

படைப்பை மையமாகக் கொண்ட ஆன்மிகத்தை நாம் வளர்க்கிறோமா? நம்முடைய வாழ்க்கையில் நம்முடைய கதாப்பாத்திரம் என்ன? தந்தையா, மூத்த மகனா அல்லது இளைய மகனா? மூத்த மகனைப் போன்று நன்மையான காரியங்களை காணாமல் இருக்கக் கூடாது. அம்மாதிரியான வாழ்க்கையில் செழிப்பு இருக்காது. எந்த மாற்றத்தையும் ஏற்று கொள்ளாதவர்கள் ‘இறந்தவர்களாகவே’ இருப்பர். ஒரு தந்தையின் பணி பிறரை வாழ வைப்பது. மாற்றமும் வளர்ச்சியும் தந்தையால் எப்போதும் சாத்தியமான ஒன்று. ‘தொலைந்த’ மகன் மீண்டும் கண்டெடுக்கப்பட்டார். அப்பா தன் இரண்டு மகன்களும் நலமாக இருக்க வேண்டும் என்றே விரும்புகிறார். இளைய மகன் மனந்திரும்பியதே ஒரு வெற்றிதான்.

நம்முடைய வாழ்க்கை எத்தகையதாக அமைந்துள்ளது? படைப்பனைத்தையும் கொண்ட ஆன்மிகமா? அதில் மகிழ்ச்சியும் வாழ்வும் அடங்கியுள்ளதா? என்று பார்க்க வேண்டும். அல்லது மூத்த மகனைப் போன்று ‘இறந்து போன’ ஒரு வாழ்க்கையா? சிந்திப்போம்.

ஒரு கேள்வி: கடவுள் அனைவரையும்விட இரக்கம் உள்ளவரா?

*“ஆகவே, நான் உமக்குச் சொல்கிறேன்; இவர் செய்த பல பாவங்கள் மன்னிக்கப்பட்டன. ஏனெனில், இவர் மிகுதியாக அன்பு கூர்ந்தார். குறைவாக மன்னிப்புப்*

*பெறுவோர் குறைவாக அன்பு செலுத்துவோர் ஆவர்" என்றார். லூக்கா 7:47*

## என் நிலைபாடு

- நாம் அனைவரிடமும், குறிப்பாக நம்மைச் சுற்றியுள்ளவர்களிடம் "இரக்கம்" என்ற நிலைப்பாட்டை வளர்ப்பதில் உறுதியாய் இருப்போம். குறிப்பாக ஏழைகள், புலம்பெயர்ந்தோர், முதியவர்கள், வீடற்றவர்கள், அனாதைகள் போன்றவர்களிடம் இரக்கம் காட்டுவோம். இத்தவக்காலத்தில் அனைவரிடம் இரக்கம் காட்டுவோம். உதவி தேவைப்படுவோருக்கும் நம்மால் இயன்றதை செய்வோம்:
    - அத்தியாவசியப் பொருட்களை விநியோகிப்பதன் மூலம் நமது பகுதியில் வாழ்பவர்களுக்கு உதவ முயற்சிக்கலாம்.
    - அன்புக்குரியவர்களை இழந்து தவிப்பவர்கள், மனச்சோர்வடைந்தவர்கள், தொற்றுநோயால் நெருக்கடிகளை எதிர்கொள்பவர்களுடன் கலந்துரையாடலாம். அவர்கள் சொல்வதைக் கேட்கலாம்.
    - அக்கம் பக்கத்தில் கஷ்டப்படுபவர்களைப் பார்த்தும் பார்க்காததுபோல் இருக்கக் கூடாது.
    - அதிச, POHD, SSVP (முடிந்தால்) தங்களால் முடிந்த உதவிகளைத் தேவைப்படுவோருக்குச் செய்யலாம்.
    - கோவிட் தொற்றினால் இறந்தவர்களுக்காகச் செபிக்கலாம்.
- நாம் அன்பு செய்தவர்களையோ அல்லது நம்மைச் சுற்றியுள்ளவர்களையோ நாம் நம்ப மறுத்ததுண்டா? அவர்களிடம் ஏற்பட்ட நல்ல மாற்றங்களை நம்பாமல் இருந்ததுண்டா?

தவக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு,
ஏப்ரல் 3, 2022:

# மதம் - அன்பானவர்களுக்கா அல்லது கொடியவர்களுக்கா?

எல்லாவற்றிற்கும் மேலாக நமது இதயங்கள் பொதுநலனில் அக்கறை கொண்டு செயல்பட்டால், இப்புவியில் உள்ள எதையுமே நாம் புறம்தள்ள முற்படமாட்டோம். பிற உயிரினங்கள்மேல் நாம் காட்டும் வெறுப்பு, சில இறுதியில் மனித இனத்தின் வெறுப்பிலும், துன்புறுத்துவதிலும் சென்று அடையும் என்பது நிச்சயம். நம்மிடம் ஓர் இதயம் மட்டுமே உள்ளது. ஆகவே, பிற விலங்குகளைத் துஷ்பிரயோகம் செய்யும் அதே இதயம், மனித உறவுகளையும் துஷ்பிரயோகம் செய்ய தயங்கவே தயங்காது.

“பிற உயிரினங்களை வதைக்கும் ஒவ்வோரு செயலும் மனிதனுடைய மாண்புக்கும், மரியாதைக்கும் எதிராகச் செய்யப்படும் செயல்” என்று கத்தோலிக்கத் திருச்சபை மறைக்கல்விப் போதனைகள், 2418 ஆம் எண்ணிலிருந்து வாசித்து அறிகிறோம். இப்பிரபஞ்சத்தில் காணப்படும் அனைத்து நிலைகளிலும் நமது அன்பைக் காட்டாமல் ஒருசிலவற்றை மறந்துவிடும் போது, நாம் பொய்யர்களாக ஆக்கப்படுகிறோம்.

இதைப்பற்றி எழுதுவகையில் தோமினிக்கன் நாட்டு ஆயர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்: “சமாதானம், நீதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு... இம்மூன்றுமே ஒன்றோடோன்று நெருக்கமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தனித்தனியாகப் பிரித்தெடுத்து, தனித்தனியாகப் பார்க்கும் முயற்சிகள் மீண்டும் நம்மைப் படுப்பாதாளத்தில் தள்ளிவிடும் என்பது நிச்சயம்.

இப்பிரபஞ்சம் உறவுகள் மேல் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதில் மனித இனம் சகோதரி, சகோதரனாக, பிற உயிரினங்களுடன் ஓர் ஆன்மிகத் திருப்பயணம் செய்து கொண்டுள்ளது. இறை அன்பினால் உருவாக்கப்பட்ட பிற உயிரினங்களோடு, மனித இனம், அன்பின் மூலம் இணைக்கப்பட்டு ‘ சகோதரன் சூரியன்,

சகோதரி நிலவே, சகோதரன் நதியே சகோதரி புவியே' என்று அழைக்கும் உரிமையை உறவாகப் பெற்றுள்ளான்.

*லாடாதோ சி #92*

## நற்செய்தி – யோவான் 8:1-11
## "உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண்மேல் கல் எறியட்டும்"

இயேசு ஒலிவ மலைக்குச் சென்றார். பொழுது விடிந்ததும் அவர் மீண்டும் கோவிலுக்கு வந்தார். அப்போது மக்கள் அனைவரும் அவரிடம் வந்தனர். அவரும் அங்கு அமர்ந்து அவர்களுக்குக் கற்பித்தார். மறைநூல் அறிஞரும் பரிசேயரும் விபசாரத்தில் பிடிபட்ட ஒரு பெண்ணைக் கூட்டிக் கொண்டு வந்து நடுவில் நிறுத்தி, "போதகரே, இப்பெண் விபச்சாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடிப்பட்டவள். இப்படிப்பட்டவர்களைக் கல்லால் எறிந்து கொல்ல வேண்டும் என்பது மோசே நமக்குக் கொடுத்த திருச்சட்டத்திலுள்ள கட்டளை. நீர் என்ன சொல்கிறீர்?" என்று கேட்டனர். அவர்மேல் குற்றம் சுமத்த ஏதாவது வேண்டும் என்பதற்காக அவர்கள் இவ்வாறு கேட்டுச் சோதித்தார்கள். இயேசு குனிந்து விரலால் தரையில் எழுதிக்கொண்டிருந்தார். ஆனால், அவர்கள் அவரை விடாமல் கேட்டுக்கொண்டிருந்ததால், அவர் நிமிர்ந்து பார்த்து, "உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண்மேல் கல் எறியட்டும்" என்று அவர்களிடம் கூறினார். மீண்டும் குனிந்து தரையில் எழுதிக் கொண்டிருந்தார்.

அவர் சொன்னதைக் கேட்டதும் முதியோர் தொடங்கி ஒருவர் பின் ஒருவராக அவர்கள் யாவரும் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். இறுதியாக இயேசு மட்டுமே அங்கு இருந்தார். அப்பெண்ணும் அங்கேயே நின்று கொண்டிருந்தார். இயேசு நிமிர்ந்து பார்த்து, “அம்மா, அவர்கள் எங்கே? நீர் குற்றவாளி என்று எவரும் தீர்ப்பிடவில்லையா?” என்று கேட்டார். அவர், “இல்லை, ஐயா” என்றார். இயேசு அவரிடம் “நானும் தீர்ப்பு அளிக்கவில்லை. நீர் போகலாம். இனிப் பாவம் செய்யாதீர்” என்றார்.

## சிந்தனைக்கு

விவிலியத்தில் மிகவும் அழகான வரிகள் உள்ளன. அவ்வகையில் 1 யோவான் 4:7-8இல் இப்படியாக எழுதப்பட்டிருக்கின்றது. ‘அன்பார்ந்தவர்களே, ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துவோமாக! ஏனெனில், அன்பு கடவுளிடமிருந்து வருகிறது. அன்பு செலுத்தும் அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள். அவர்கள் கடவுளை அறிந்துள்ளார்கள். 8அன்பில்லாதோர் கடவுளை அறிந்து கொள்ளவில்லை; ஏனெனில், கடவுள் அன்பாய் இருக்கிறார்.’ அன்னை தெரேசாபோல, நாம் பெரிய காரியங்களைச் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. சிறிய காரியங்களை அன்போடு செய்யுங்கள்’ என்கிறார்.

மதத் தலைவர்கள் கடவுளின் சட்டம், அதன் அர்த்தம், நோக்கம் குறித்து அதிகம் கவலைப்படுவதில்லை. “இந்தப் பெண்ணுக்குத் தாங்கள் செய்யும் காரியம் அன்பான காரியமா? என்று யோசிக்கத் தோன்றவில்லை. இயேசுவை எதிர்க்கும் வண்ணம் அவர்களை அந்தப் பெண்ணைக் கல்லெறிந்து தாக்கவும் கொல்லவும் முற்படுகின்றனர்.

இந்த வாரம், இயேசுவை ஏற்றுக்கொண்டவராக வாழ்வது என்றால் என்ன என்று நம்மை நாமே கேட்டுக்கொள்வோம். அதோடு மற்றவர்களுடனான நமது உறவுகளில் நம்மிடம் இருக்க வேண்டிய சில நல்ல மனப்பான்மைகள் பற்றிக் கருத்தில் கொள்வோம்.

## தவக்கால முயற்சி

இவ்வாரத்தில் நம்மிடம் இருக்கக்கூடிய கொடுமையான மனப்பான்மையைப் பற்றிச் சற்றுச் சிந்திப்போம். ஒருசில நேரங்களில் 'நான் உன்னைவிடச் சிறந்தவன் என்ற மனப்பான்மை நம் சிந்தனைக்கு வரும். நாம் இயேசுவைப் பின்பற்றுவதன் நோக்கம் அதுதானா? இவ்வாரம் நாம் நம்மையே கேட்க வேண்டிய முக்கியக் கேள்வி 'நமது விசுவாசத்தையும் நம்பிக்கையையும் மற்றவர்களைத் தாக்கும் ஆயுதமாக நாம் எப்பொழுதாவது பயன்படுத்தியுள்ளோமா? அல்லது நாம் செய்கின்ற செபம், மற்றவர்களை அவமதிக்கக்கூடிய ஆயுதமாக இருந்துள்ளதா? யாராவது தேவாலயத்திற்கு வராமல் இருந்திருந்தால், அதேயே நாம் அடிக்கடிச் சுட்டிக் காட்டியுள்ளோமா? அல்லது மற்றவர்களைப் பழிவாங்கும் நோக்கில் நாம் செபம் செய்துள்ளோமா? சிந்திப்போம்.

## என் நிலைபாடு

- மற்றவர்களை அவமானப்படுத்தவும், அவர்களைப் பயமுறுத்தவும், குற்றவாளியாகவும் கடவுளையும் என் நம்பிக்கையையும் பயன்படுத்துவதை நிறுத்துவேன்.

- அன்பும் இரக்கமும் கொண்ட பிள்ளையாக, கடவுளின் சாட்சியாக இருப்பேன்.
- மிருகங்களைக் கொடுமைப்படுத்த மாட்டேன்.

## உறுதியான நடவடிக்கை

யாருக்காக (நாம்/நான்) பிரார்த்தனை செய்கிறோம்? நம் பெற்றோர்கள், அன்புக்குரியவர்கள், நாடு, இறந்தவர்கள், நோயாளிகள், துன்பப்படுபவர்கள், புலம்பெயர்ந்தோர், நமது தலைவர்கள் மற்றும் உலகத்திற்காக நாம் பிரார்த்தனை செய்கிறோமா? கடவுள் அவர்களை இறை அன்பில் அரவணைக்க வேண்டும். அவர்கள் மட்டுமே நம் விமர்சனங்களுக்குத் தகுதியானவர்களா? சிந்திப்போம்.

குருத்து ஞாயிறு, ஏப்ரல் 10,2022

# அமைதியற்ற வாழ்வில் இருந்து, இறைவனோடு ஓர் அமைதியான வாழ்க்கை

கிறிஸ்தவப் பாரம்பரியப் புரிதலில், இப்புவியின் முடிவும், இப்புவியிலுள்ள படைப்புகளின் முடிவும், துவக்கத்திலிருந்தே கிறிஸ்துவின் மறைபொருளில் முழுமைப் பெற்றிருக்கின்றன, அனைத்தும் அவர் வழியாய், அவருக்காகப் படைக்கப்பட்டன (கொலோ 1:16) யோவான் நற்செய்தியில் நாம் காணும் முன்னுரைப் பாடலில் (யோவான் 1:1-18) இயேசு கிறிஸ்து ' இறைவாக்காக' (Logos) இருந்து படைப்பை உருவாக்கக் காரணமாய் இருந்திருக்கிறார் என்று வாசித்து அறிந்து கொள்கிறோம். அதே இறைவாக்கு இயேசுவை மனிதராக உருவாக்கக் காரணமாய் இருந்திருக்கிறது எனும் அதிர்ச்சித் தகவலை அதே முன்னுரைப் பாடல் நமக்குச் சொல்லி ஒரு திருப்புமுனையை ஏற்படுத்துகிறது. “வாக்கு மனிதர் ஆனார்” (யோவான் 1:14)

மூவொரு கடவுள் மத்தியிலிருந்து ஒரு நபர் இப்பிரபஞ்சத்திற்குள் நுழைந்து, இப்புவியின் வாழ்வில் பங்கு கொண்டு, சிலுவையில் துன்பம் அனுபவிக்கும் அளவுக்கு நம்மோடு உறவு கொண்டுள்ளார்.

*லாடாதோ சி #98 - #99*

## நற்செய்தி – லூக்கா 23:34 - 47 [திருப்பாடுகள் வாசகம் - தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்தலங்கள்]

மண்டை ஓடு எனப்படும் இடத்திற்கு வந்ததும் அங்கே அவரையும் வலப்புறம் ஒருவனும் இடப்புறம் ஒருவனுமாக அக்குற்றவாளிகளையும் அவர்கள் சிலுவைகளில் அறைந்தார்கள்.

அப்போது [இயேசு, “தந்தையே, இவர்களை மன்னியும். ஏனெனில், தாங்கள் செய்வது என்னவென்று

இவர்களுக்குத் தெரியவில்லை" என்று சொன்னார்.] அவர்கள் அவருடைய ஆடைகளைக் குலுக்கல் முறையில் பங்கிட்டுக் கொண்டார்கள்.

*சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை கேலி செய்கின்றனர்*

மக்கள் இவற்றைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். ஆட்சியாளர்கள், "பிறரை விடுவித்தான்; இவன் கடவுளின் மெசியாவும், தேர்ந்தெடுக்கப்பட்டவனுமானால் தன்னையே விடுவித்துக் கொள்ளட்டும்" என்று கேலிசெய்தார்கள். படைவீரர் அவரிடம் வந்து புளித்த திராட்சை இரசத்தைக் கொடுத்து, "நீ யூதர்களின் அரசனானால் உன்னைக் காப்பாற்றிக் கொள்" என்று எள்ளி நகையாடினர். "இவன் யூதரின் அரசன்" என்று அவரது சிலுவையின் மேல் எழுதி வைக்கப்பட்டிருந்தது.

*நல்ல கள்வன்*

சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்த குற்றவாளிகளுள் ஒருவன், "நீ மெசியாதானே! உன்னையும் எங்களையும் காப்பாற்று "என்று அவரைப் பழித்துரைத்தான். ஆனால், மற்றவன் அவனைக் கடிந்து கொண்டு, "கடவுளுக்கு நீ அஞ்சுவதில்லையா? நீயும் அதே தீர்ப்புக்குத்தானே உள்ளாகி இருக்கிறாய். நாம் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயல்களுக்கேற்ற தண்டனையை நாம் பெறுகிறோம். இவர் ஒரு குற்றமும் செய்யவில்லையே!" என்று பதிலுரைத்தான். பின்பு அவன், "இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்" என்றான். அதற்கு இயேசு அவனிடம், "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர் என உறுதியாக உமக்குச் சொல்கிறேன்" என்றார்.

*இயேசுவின் மரணம்*
ஏறக்குறைய நண்பகல் பன்னிரண்டு மணி முதல் பிற்பகல் மூன்று மணிவரை நாடெங்கும் இருள் உண்டாயிற்று. கதிரவன் ஒளி கொடுக்கவில்லை. திருக்கோவிலின் திரை நடுவில் கிழிந்தது. “தந்தையே, உம்கையில் என் உயிரை ஒப்படைக்கிறேன்” என்று இயேசு உரத்த குரலில் கூறி உயிர் துறந்தார்.

*இறப்புக்குப் பின்*
இதைக் கண்ட நூற்றுவர் தலைவர், “இவர் உண்மையாகவே நேர்மையாளர்” என்று கூறிக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார்.

## சிந்தனைக்கு
இன்றைய நற்செய்தியில் உணர்ச்சிகரமான பாத்திரம் என்றால் நாம் யாரைக் குறிப்பிடலாம்? சில ஆன்மிக எழுத்தாளர்கள், நல்ல திருடன் அல்லது நூற்றுவர் தலைவருக்குப் பதிலாக, “அவரைச் சிலுவையில் அறையுங்கள், சிலுவையில் அறையுங்கள்...” என்று கூச்சலிடுவதில் கூட்டத்துடன் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்று கூறியுள்ளனர். ஏனென்றால், நம்மில் ஒரு பகுதியினர் மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்பதிலேயே கருத்தாய் இருக்கின்றனர்.

இந்தத் தவக்காலத்தில் மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்பதைவிட நமக்கு எம்மாதிரியான மாற்றம் தேவைப்படுகின்றது என்பதை குறித்து யோசிப்போம். ஏனெனில், இயேசுவுக்கு நாம் ‘ஆம்’ என்று சொல்வது ஒரு முறை அல்ல. நாம் இப்பொழுது சொல்லுகின்ற ‘ஆம்’ என்பது நமது நடைமுறை வாழ்க்கைச் சூழலுடன் ஒட்டி

வருகின்ற ஒன்று. நமது வாழ்க்கைப் பயணத்தில் வழி தவறியிருக்கலாம் அல்லது இயேசுவின் பார்வையில் இருந்து சற்று மறைந்திருக்கலாம்.

இத்தவக்காலத்தில் நாம் சொல்கின்ற 'ஆம்' எனும் வார்த்தை இயேசுவுடன் நம்மை மீண்டும் இணைக்கும் ஒரு பாலமாக இருக்கட்டும். இறைவனுக்கும் நமக்கும் உள்ள உறவு ஒருவழி பயணமாக இருக்கக் கூடாது. கடவுள் ஓர் 'அசையாத' ஜீவன் அல்ல. அவரைத் தேடுவோரின் இதயத்தில் இறைவன் குடிகொண்டுள்ளார். இதன்வழி இறைவனுக்கும் நமக்கும் உள்ள இடைவெளி குறைந்து, உறவு இன்னும் இறுக்கமாகிறது. மேலும், மனந்திரும்புதல் வழியாக புதிய அனுபவத்தையும் குணப்படுத்துதலையும் நாம் உணர்கின்றோம். நாம் அனைவரும் நல்ல கள்வனாக இருக்க முயற்சிக்க வேண்டும்.
தன் சக திருடன் இயேசுவுக்குச் செய்வதைப் போல மற்றவர்களின் வீழ்ச்சியில் மகிழ்ச்சியடையக்கூடாது. முடிந்தவரை பிறர் துன்பத்தில் பங்கெடுக்க வேண்டும். நல்ல கள்வன் தான் செய்த தவற்றை உணர்ந்து சிலுவையில் மனம் வருந்துகிறான். இதன் வழி இறைவனுடன் இணக்கமாகின்றார்.

"இயேசுவே, நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்"

## தவக்கால முயற்சி

இந்தத் தவக்காலத்தில் நாம் எடுத்த முடிவுகளையும் நமது நிலைப்பாட்டையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நம்முடைய ஆன்மிக வாழ்க்கை இன்னும் இறுதியாக இருக்க நாம் செய்ய வேண்டிய முக்கியக் காரியங்கள் என்னவென்று நாம் அலசி ஆராய

வேண்டும். நம்முடைய வாழ்க்கை, இறைவனின் படைப்பைப் பிரதிபலிப்பவையாக இருத்தல் அவசியம்.

## என் நிலைபாடு

- இந்தப் பூமியைப் பராமரிப்பதற்கும், கடவுளின் படைப்பை நன்கு பாதுகாக்கவும் உங்கள் பங்கை நீங்கள் எப்படிச் செய்ய முடியும் என்பதைப் பற்றிய உங்கள் குறுகிய தனிப்பட்ட பார்வை மற்றும் பிரார்த்தனையை எழுதுங்கள்.
- தவக்காலப் பிரச்சாரம் 2022 க்கு உங்கள் பங்களிப்பும் இலக்கும் என்னவென்று உறுதி செய்த பிறகு, அவற்றைத் திருச்சபை அல்லது மறைமாவட்டத்தில் சமர்ப்பிக்கவும்.
- இயற்கையைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் நமது பங்குக்குத் தன்னார்வளர்களாக இருக்க முற்படுவோம்.